பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர் 19 கார்த்திகை 11 ஜுல்ஹஜ் 14 இதழ் 286
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26-11-77

லாலா தயாரிப்பு
புதிய முறையில் சன்சயின் சோப் தயாரிக்கப்பட்டு இலங்கை முழுவதிலும் விற்பனையாகிறது.
சன்சயின் சோப்பை உபயோகித்து அதன் தரத்தை தெரிந்து கொள்ளுங்கள்
ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## இந்தியவானொலி நிலையத்தில் தீ!

### நாசவேலை காரணமாம்

புதுடில்லி, நவ. 25

புதுடில்லி வானொலி நிலையத்தில் இன்று காலை ஏற்பட்ட தீ எதுவித சேதமுமின்றி அணைக்கப்பட்டது. நாசவேலையே இதற்குக் காரணம் என்று பொலிசார் தெரிவித்தனர்.

வானொலி நிலையத்தின் செய்திப் பிரிவிலேயே இத் தீ விபத்து ஏற்பட்டதாம். இனந்தெரியாத இரண்டு பேர் செய்திப் பிரிவின் அறைக்கு வெளியே

(6-ம் பக்கம் பார்க்க)

# ஆகஸ்ட் யாழ். கலவரம் பற்றி உயர்பொலிஸ்குழு ஆராய்கிறது

## பொலிஸ் தொடர்பு குறித்து யாழ்ப்பாணத்தில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட் மாதம் நடந்த கலவரம்பற்றி ஆராய்ந்து விபரம் திரட்டுவதற்கு பொலிஸ் உயர்குழு ஒன்று இங்கு வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களுக்கும் யாழ். பொலிசாருக்கும் எவ்விதத்தில் தொடர்புண்டு என்பது பற்றியே இக்குழு முக்கியமாக ஆராயும் என்று தெரிகிறது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரம் யாழ்ப்பாணத்தில் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களைத்தொடர்ந்தே இடம்பெற்றதனால் யாழ். அசம்பாவிதத்திற்கும் பொலிசாருக்கும் என்ன சம்பந்தம் என்பதுபற்றி விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் பணித்துள்ளதை அடுத்தே இக்குழு யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இக்குழுவில் பொலிஸ் அதிபர் திரு. பிராங் டில்வா, இன்ஸ்பெக்டர் கந்தையா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். யாழ். பொலிஸ் அதிபர் திரு. ரணமுத்துகல, மற்றும் உதவி பொலிஸ் அதிபர்கள் ஆகியோரை சந்தித்து ஆக

[6-ம் பக்கம் பார்க்க]

## தென் இந்திய புயல் சேதம்:

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்கள் 41 லட்சம் ரூபா உதவி

(புதுடில்லி, நவ. 25)

தமிழ்நாடு, ஆந்திரா, கேரள மாநிலங்களில் ஏற்பட்ட புயல், வெள்ள அழிவுகளின் நிவாரணத்தின் பொருட்டு சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 12 செஞ்சிலுவைச் சங்கங்கள் 41 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தமது பிரதிநிதி ஒருவரையும் அனுப்பிவைக்க இச்சங்கங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

மேற்கு ஜெர்மன் செஞ்சிலுவைச் சங்கம் விமானம் ஒன்று நிறைய நிவாரண பொருட்களை அனுப்பி வைத்துள்ளது.

பிரான்ஸ் செஞ்சிலுவைச் சங்கம் 7000 தொன் குழந்தைகள் உணவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இதே வேளை இவ்வெள்ளக் கொடுமைகள் பற்றி வருத்தம் தெரிவித்துள்ள திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் மத்திய மாநில அரசுகளுடன் பொதுமக்களும் நிவாரண வேலைகளில் உதவ வேண்டும் என்று பம்பாயில் இருந்து வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

## விமானவிபத்தில் 35 பேர் பலி!

பாரிஸ், நவ. 25

தென் மேற்கு பிரான்ஸில் இராணுவ விமானம் ஒன்று இன்று பனிபடர்ந்த மலை உச்சியில் மோதி சுக்குநூறாகியது.

இவ் விமானத்தில் சென்ற 30 கடற்படை விளையாட்டு வீரர்களும் 5 விமானிகளும் ஸ்தலத்திலேயே பலியானார்கள் என்று அறிவிக்கப் பட்டது. (இ)

## உலகத் தமிழ்க் கலைத்தூது: இன்று ஆலோசனைக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை கல்வி, கலை, பண்பாட்டுக் காப்புக்கழகத்தின் பொதுச்செயலாளர், ஓவியர் ச. பெனடிக்ற் மேற்கொள்ளவிருக்கும் உலகத்தமிழ்க்கலைத்தூது தொடர்பாக ஆராய்ந்துதவும்பொருட்டு இன்று மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக்கலை மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது.

ஓவியர் ச. பெனடிக்ற் முதலில் அமெரிக்காவுக்கும் பின்னர் மற்றும் நாடுகளுக்கும் கலைத்தூதை மேற்கொள்வார்.

இன்று நடைபெறும் பொதுக்கூட்டத்தில், யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், வளாக விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றுவார்கள்.

கழகக்காப்பாளர் வணபிதா சே. தனிநாயகம் அடிகளார் வாழ்த்துரை வழங்குவார்.

பல அறிஞர்கள், கலைஞர்கள், கலையன்பர்களின் ஒத்துழைப்புடன் கடந்த ஏழு ஆண்டுகளாகச் சிறப்பாக இயங்கிவரும் பண்பாட்டுக் காப்புக்கழகம், வெளிநாடுகளிலிருக்கும் தங்களுக்கு அறிமுகமான தமிழ் அன்பர்களின் முகவரிப் பட்டியலை இன்றைய கூட்டத்தில் சமூகமளிப்பவர்கள் கொடுத்துதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## பண்ணை அகதிகள் முகாம் மூடப்பட்டது!

### குடும்பங்கள், வெளியேறவில்லை

[யாழ்ப்பாணம்)

பண்ணையிலுள்ள அகதிகள் முகாம் நேற்று முன்தினம் அரசினால் மூடப்பட்ட போதிலும் அங்குள்ள 11 அகதிகள் குடும்பங்களும் இன்னும் வெளியேறவில்லை.

இக்குடும்பங்களுக்கு 350 ரூபா வீதம், சமூக சேவை இலாகாவினால் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்கள் செல்லும் இடத்திற்கு இலவச ரயில் பயணச்சீட்டும் வழங்கப்படும்.

வீட்டுத் தளபாட சாமான்கள் வாங்குவதற்கு 500 ரூபா அரசினால் வழங்கப்படுமெனத் தெரியவருகிறது.

இங்குள்ள 4 குடும்பங்களுக்கு அரசு காணி வழங்கியுள்ளது.

அரியாலையில் தொழில் செய்ய விரும்பும் இரு குடும்பங்களுக்கும், விவசாயம் செய்யும் இரு குடும்பங்களுக்கும், விஸ்வமடுவில் காணி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் எல்லோரும் இலங்கைப் பிரஜைகளாகும்.

### நெடுங்கேணியில் காணி

அகதிகள் புனர்வாழ்வு குழு, நெடுங்கேணியில் 4 குடும்பங்

(6-ம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி என்பது வெறும் காட்சிப் பொருள் அல்ல

### அவர்களது ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும் என்கிறார் 'அமிர்'

[யாழ்ப்பாணம்]

'இந்த நாட்டின் பிரதான கட்சியாக விளங்கும் ஸ்ரீ ல சு. கட்சி வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்த எத்தனித்தது. அதை ஜனநாயக அரசு என்று கூறிக்கொள்ளும் ஐ. தே. க. அரசு தடுத்து நிறுத்தியுள்ளது. தம்மை எதிர்ப்பவர்களை அடக்குவது ஜனநாயகமல்ல. எதிர்கட்சிகளை காட்சிப் பொருளாக வைப்பதில் அர்த்தமில்லை. அவர்களது ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்'

இவ்வாறு நேற்று யாழ். ராஜா தியேட்டரில் நடைபெற்ற அக்டோபர் புரட்சியின் 60-வது ஆண்டு விழாவில் தலைமை வகித்து பேசிய

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணம் இல. 9 ஸ்ரான்லி வீதி பரமேஸ்கோணேஸ் புரடக்ஷன்ஸ் ஸ்தாபனத்திற் கடமையாற்ற இசை ஆர்வம் மிக்க இருவர் தேவை. ஆண் பெண் எவராயினும் 29-11-77 மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நேரிற் சந்திக்கவும். கட்டுப் பணம் செலுத்த வேண்டும். நற்சாட்சிப் பத்திரம் கொண்டு வரவும். பரமேஸ்கோணேஸ் புரடக்ஷன்ஸ். 7773

13 வயதுக்கு மேற்பட்ட வேலை பழகுநர்கள் (ஆண்கள்) கண்ணாடித் தொழிற்சாலைக்கு உடனடியாகத் தேவை. வேலை பழகும்பொழுதும் வேதனம் கொடுக்கப்படும். நேரில் வரவும். 25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7742

## தேவை

அனுபவமுள்ள சமையல்காரர் தேவை. நேரில் வரவும். அதிகாரி, இணுவில் ஆஸ்பத்திரி, இணுவில். 7753

## விற்பனைக்கு

கீரிமலை கேணிக்கு அண்மையில் காங்கேசன்துறை பிரதான வீதியில், 4 லாச்சம் நிலமும் வீடும் விற்பனைக்குண்டு. விலை ரூபா 35,000/- விபரங்களுக்கு: 'சுகிர்தவாசா' மானிப்பாய் ரோட், உடுவில், சுன்னாகம். 7750

5 ஸ்ரீ 7745 இலக்க 150 C. C.-S X இத்தாலியன் ஸ்கூட்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வே. நாகலிங்கம், புளியங்கூடல், ஊர்காவற்றுறை. 7682

## பயிற்சி

இளைஞர்கட்கு மூன்றுமாத கால பொது விவசாயப் பயிற்சிகள் நற்சாட்சிப் பத்திரம், சான்றிதழ்களுடன், உடனடியாக நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர், விவசாய நிறுவனம் மருதனார்மடம். (இணுவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்) 7771

## கல்வி

A/L (78) விஞ்ஞான கலை வர்த்தக துரித மீட்டல் வகுப்புகளும் A/L (H.N.C.E.-79) ஆங்கில வகுப்புகளும் ஆரம்பம். 1-12-77 பி. ப. 4-15 பதிவு செய்க. பல்கலைக் கல்விக் கழகம் MEI 508 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7772

# 'குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளருக்கு ஏமாற்றம்'

(யாழ்ப்பாணம்)

"1300 ரூபா சம்பளமாகப் பெறுபவர்களுக்கும் 310ரூபா சம்பளமாகப் பெறுபவர்களுக்கும் எதுவித வித்தியாசமில்லாத வரிவுசெலவுத்திட்டத்தில் எப்படி ஆகக்குறைந்த வருமானம் பெறுபவர்கள் நன்மை அடைகிறார்கள் என்பது விளங்கவில்லை."

அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளன யாழ். மாவட்ட செயலாளர் திரு. க. நவரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இந்நாட்டில் 'ஆகக்குறைந்த சம்பளம் பெறும் அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களில் 90சதவீதத்தினர் மாதச் சம்பளம் 330 ரூபா பெறுகின்றார்கள். 4வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே 300 ரூபாவுக்குக் குறைந்த சம்பளம் பெறுகின்றார்கள். இவர்களில் அநேகமானவர்கள் குடும்பப் பொறுப்பில்லாதவர்கள்.

"லிகிதர் சேவைக்குக் குறைந்த தரத்திலுள்ள சகல ஊழியர்களும்தான் ஆகக் குறைந்த சம்பளத்தைப்பெறும் தொழிலாளர்களாவர். இவர்களுக்கு இலவச அரிசி வெட்டுப் பொருந்துமானால் ஆகக்கூடிய சம்பள உயர்வு பெறுபவர்களுக்கும், எமக்கும் சமத்துவம் காண்பதுதான் சோஷலிச கோஷமோ எனத் தொழிலாளர் வேதனைப்படுகின்றனர்." [க-அ]

வவுனியாவில் சம்பவம்

# கத்திக்குத்துக்கு தந்தை பலி; மகன் கைது!

(வவுனியா)

தந்தைக்கும் மகனுக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து தந்தை கத்திக்குத்துக்குப் பலியானதாகக் கூறப்படுகிறது.

50வயதான ஏச் சுபசிங்கா விற்கும், அவரது மகன் தர்ம வீராவுக்கும்(18வயது) வாக்குவாதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இச் சம்பவம் ஏற்பட்டதாம்.

பொலிஸார், சந்தேகநபரான மகனை கைதுசெய்துள்ளனர்.

மரணவிசாரணைக்கான ஏற்பாட்டை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (க-அ)

கூட்டுறவுச் சங்கங்களில்

# புதிய முறையில் நெறியாளர் தெரிவு

(கொழும்பு)

கூட்டுறவுச்சங்க நெறியாளர்கள்; அந்தந்தக்கூட்டுறவுச்சங்கத்தின் பங்குதாரர்களாகவுள்ளவர்களாலேயே தெரிவுசெய்யப்படவேண்டும் என்பதைப்பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பொதுநலக் கமிட்டியினர் அலரிமாளிகையில் பிரதமரைச் சந்தித்துபேச்சுவார்த்தைநடத்தியபோதே இப்பிரச்னை பற்றி ஆராயப்பட்டது.

இச்சந்திப்பின்போது, கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத், அமைச்சு செயலாளர் திரு. கே. பி. திஸநாயக்கா, கூட்டுறவு ஆணையாளர் திரு. ஆர். எம். விதானே ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொதுநலக் கமிட்டிசார்பில் திரு. ஆர். ஐ. பெர்ணாண்டோ, டாக்டர் நவில் கருணதிலக, திரு. விஜயரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மேலும் கூறியதாவது:

"அந்தந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் பங்காளராகச் சேர்ந்துள்ள உறுப்பினர்கள் மூலமே கூட்டுறவுச்சங்க நெறியாளர்கள் தெரிவுசெய்யப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். சங்கங்களுக்குத் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவதன்மூலம் பாவனையாளர்கள் திருப்தியடையவேண்டும் என்பதே எமது எண்ணமாகும்."

## விண்ணப்பிக்குக

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் விநியோகிக்கப்பட விருக்கும் காலபோக விவசாயக் கடன்களைப் பெறுவதற்கு இம்மாதம் 26 திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இம்முறை முன்னர் கடனைப் பெற்று தவணைதப்பிய கடனாளிகளுக்கும் கடன் கோரி விண்ணப்பிக்கலாம். ஒரு அங்கத்தவர் இரண்டு கடன்களுக்கு பிணை நிற்கலாம் என்று சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [செ]

# யாழ்ப்பாண மாநகர சபை 1978—வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு இம்மன்றத்தோடு தம்மைப் பதிவுசெய்துகொள்ளவிரும்பும் **பிரசித்தி பெற்ற வழங்குநர்கள் ஒப்பந்தகாரர்கள் உற்பத்தியாளர்கள்** ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை உள்ளடக்கும் காகித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், "........................................1978 — வழங்குநர்களைப் பதிவுசெய்தல்" எனக் குறிப்பிடப்பட்டு 9-12-1977ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இதன் கீழ் கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

அவற்றிற்கு எதிராகக் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்பட முடியாத வைப்புப் பணத்துடன் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

| | விடயங்கள் | மீளளிக்கப்படமுடியாத வைப்புப் பணம் ரூ.-ச. |
|---|---|---|
| 01. | எழுதுகருவி வகைகள் | 59-00 |
| 02. | அச்சிட்ட பொருட்கள் | 50-00 |
| 03. | அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் | 10-00 |
| 04. | (தொற்று நீக்கிகள் உள்ளடங்க) சௌக்கியப் பொருட்கள் | 50-00 |
| 05. | மேல்நாட்டு மருந்துகளும், கருவிகளும் | 25-00 |
| 06. | மரம் | 25-00 |
| 07. | பெற்றோல், எந்திர எண்ணெய் ஆகியன | ........ |
| 08. | ரயர்கள் மற்றும் குழாய்கள். (ரியூப்) | ........ |
| 09. | நீர்மானிகள் | ........ |
| 10. | பீ. வீ. ஸீ. குழாய்கள், பொருத்திகள் | 25-00 |
| 11. | நாகம்பூசிய இரும்புக்குழாய்களும், பொருத்திகளும் | 25-00 |
| 12. | ஹியூம் குழாய்கள் | ........ |
| 13. | இடைச்சரண் தண்டுகள் (எம். எல். ரொட்ஸ்) | ........ |
| 14. | இரும்புப் பொருட்கள் | 50-00 |
| 15. | (எமல்சன், எனமல் மற்றும் ஏனைய) பெயின்ற் வகைகள் | 25-00 |
| 16. | ஆயுள்வேத மருந்துகள் | ........ |
| 17. | வாகன எண் தகடுகள் | ........ |
| 18. | கோலவுடைகள் | ........ |
| 19. | பால் உணவுகள் | ........ |
| 20. | உப உறுப்புக்கள் | ........ |
| 21. | திருநெல்வேலிப் பண்ணைக்கு அக்கிரோ கெமிக்கல் மற்றும் உரம் ஆகியன | ........ |
| 22. | மின்சாரப் பொருட்கள் | 100-00 |
| 23. | சகல அளவுகளிலும் கிறஷர் உடைகற்கள் | 50-00 |
| 24. | ஆனைக்கோட்டை, கண்டாவளை, மண்குப்பான், அரியாலை மண் | 50-00 |
| 25. | தேங்காய் மட்டை | 25-00 |
| 26. | சூளையிட்ட சுண்ணாம்பு | 15-00 |
| 27. | கிறஷர் தூள் | 25-00 |
| 28. | (யாழ்ப்பாணம் மற்றும் கொடிகாமக்) தென்னங்கிடுகுகள் | 25-00 |

**சேவைகள்**

| | | |
|---|---|---|
| 01. | மோட்டார் வாகனங்களை நன்னிலைப்படுத்தல் | ........ |
| 02. | அலுவலக உபகரணங்களைப் பழுது பார்த்தல் | ........ |
| 03. | திருநெல்வேலி மற்றும் கோண்டாவிலுள்ள நீர் இறைக்கும் எந்திரங்களைப் பழுது பார்த்தல் | ........ |

தேவைகளுக்கு ஏற்ப பதிவுசெய்யப்பட்ட வழக்குநர்களிடம் இருந்தே வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும். ஆயினும் அவசியமெனக் கருதும் பட்சத்தில் இந்நடைமுறையில் இருந்து நீங்கும் உரிமையைச் சபை தனக்கே ஒதுக்கியுள்ளது. வேண்டப்படும்போது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்க அல்லது கொள்வனவாணை விடுக்கப்படும்போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விவரக்கூற்றுக்களுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாகவிருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டிலிருந்து நீக்கஞ் செய்யப்படும்.

**க. சிவஞானம்.**
விசேட ஆணையாளரும் மாநகர ஆணையாளரும், யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம், 24-11-77. 7770

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகர ஆணையாளரால், யாழ். நவீனசந்தை மேல்மாடி 12-ம் இலக்கக் கடையைக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 7-12-77 நண்பகல்12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். 6-12-77 பி. ப. 3 00 மணி வரை மாநகரசபையால் வழங்கப்படும் கேள்விப் படிவத்தில் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்கொண்டு விபரங்களையும், நிபந்தனைகளையும் மாநகர சபை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
24-11-77. 7769

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் கேள்விப் பத்திர விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகட்கு இந்நகராட்சி மன்றச்சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

## வேலைகள்

1. வாடி வீட்டு முற்பக்கத்திற்கு மதில் கட்டுதல்.
2. நுணாவில் கல்வயல் வீதி திருத்தல் — வட். 7.
3. 11-ம் வட்டாரம் சாரதா வீதிக்கு தார் போடல்.
4. 6-ம் வட்டாரம் வேலாயுதம் பிள்ளை வீதிக்கு தார் போடல்.
5. 5-ம் வட்டாரம் சிவன் கந்தையா வீதிக்கு தார்போடல்.
6. 8-ம் வட்டாரம் கச்சாய் வீதி பொதுக்கிணறு துலாப் போட்டு துப்பரவாக்கல்.
7. 2-ம் வட்டாரம் மில் வீதி தார் போடல்.
8. 10-ம் வட்டாரம் முருகமூர்த்தி கோவில் வீதிக்குத் தார் போடல்.
9. 2-ம் வட்டாரம் நெல்லியடி முருகன் வீதிக்குத் தார் போடல்.
10. 8-ம் வட்டாரம் விஞ்சித்தம்பி வீதி தார் போடல்.

கேள்விப்பத்திரங்கள் 7-12-77-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் இந்நகரசபை அலுவலகத்தில், கேள்வி ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- வைப்புப் பணமாகவும் கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 5/- கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் காகித உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற் பக்கத்தில் இடதுபுறமாக இவ்வேலைக்குரிய பெயரை எழுதி விசேட ஆணையாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என விலாசமிட்டு மார்கழி மாதம் 12-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு முன் இந்நகராட்சி மன்றத்தின் சபாமண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் போடப்படவேண்டும். அல்லது அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

இதைப்பற்றிய விதிகளும், விபரங்களும் இன்னும் அறிய விரும்பின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

(ஒப்பம்)
**த. நவரட்ணராசா,**
விசேட ஆணையாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
23-11-77. 7768

ஜெனீவா மாநாடு:

# இழுபறிநிலை நீடிக்குமா?

## சதாத், பெகினின் முரண்பாடான கருத்துக்கள் ஏற்படுத்தியுள்ள சந்தேகம்

லண்டன், நவ. 25
ஜெனீவா சமாதான மாநாடு மீண்டும் கூட்டப்படும் பட்சத்தில் பலஸ்தீனியர்களின் பிரதிநிதித்துவம் குறித்து எகிப்தும், இஸ்ரேலும் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

பலஸ்தீனியரின் பிரதிநிதித்துவம் தொடர்பாக தமது இஸ்ரேலிய விஜயத்தையடுத்து எகிப்திய அதிபர் அன்வர் சதாத் வெளியிட்ட கருத்துக்கு இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் மறுப்புத்தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் குறித்து எகிப்திய அதிபர் அன்வர் சதாத் இஸ்ரேலிய விஜயம் மேற்கொண்ட தனையடுத்து சுமுகமான சூழ்நிலை உருவாகியுள்ளது என்று நம்பப்பட்ட வேளை திரு. பெகினும் சதாத்தும் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டிருப்பது இவ்விவகாரத்தில் முட்டுக்கட்டை மேலும் நீடிக்கப்போகிறதோ என்ற புதிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இது இவ்வாறு இருக்க, எகிப்திய அதிபர் அன்வர் சதாத் அடுத்தமாதம் சூடான் விஜயத்தை மேற்கொள்ளவிருக்கிறார்.

எகிப்திய விமானம், கப்பல் சவுத் பிரிட்ஜ் ரோட் மாரி லிபியா வர லிபியா தடை விதித்துள்ளது.

அன்வர் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்தால் லிபியா ஆத்திரம் கொண்டு இத்தடையை விதித்துள்ளது. (உ)

லண்டன்

## தேயிலை ஏல விற்பனையில் இந்தியா கலந்துகொள்ளாது?

புதுடில்லி, நவ. 25
லண்டனில் நடைபெறவிருக்கும் தேயிலை ஏல விற்பனையில் பாரதம் கலந்து கொள்ளக் கூடாதென்று கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாணயமாற்றைக்கருத்திற்கொண்டு இவ்விற்பனையில் பாரதம் கலந்துகொள்ளக் கூடாதென்ற இக்கோரிக்கை உள்நாட்டிலிருந்தே விடுக்கப் பட்டுள்ளது. (உ)

## சிங்கப்பூரில் இன்னிசை விரிவுரைகள்

சிங்கப்பூர், நவ. 25
சிங்கப்பூர் அறக்கட்டளை ஆட்சிக்கழகத்தின் அழைப்பை ஏற்று இங்கு விஜயம் செய்துள்ள இலங்கை நல்லை ஞான சம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இங்குள்ள ஆலயங்களில் இன்னிசை விரிவுரைகள் நிகழ்த்தி வருகிறார்.

சவுத் பிரிட்ஜ் ரோட் மாரியம்மன் கோவில், சிலோன் ரோட் செண்பகவிநாயகர் கோவில், குவீன்ஸ்வே முனீஸ்வரன் கோவில், சிராங்கூன் ரோட் வீரமாகாளி அம்மன் கோவில், லூட்லன்ஸ் ரோட் அரசகேசரி சிவன்கோவில், டாங்க் ரோட் தண்டாயுதபாணி கோவில், கன்பரா ரோட் பாலசுப்பிரமணியர் கோவில் முதலிய ஆலயங்களில் கடந்த 21ம் திகதிவரை இன்னிசை விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார். அடுத்த மாதம் முதலாம் திகதி ஸ்ரீநிவாசப்பெருமாள் கோவிலில் இராமாயணவிரிவுரை நிகழ்த்துவார்.

மேலும் பல ஆலயங்களில் விரிவுரைகள் நிகழ்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. (அ)

ஜப்பானிய அமைச்சரவை:

## டிசம்பரில் மாற்றம் ஏற்படும் பிரதமர் தகவல்

டோக்கியோ, நவ. 25
ஜப்பானிய அமைச்சரவையில் டிசம்பர் மாத இறுதியில் மாற்றம் செய்யப்படவிருக்கிறது.

இத்தகவலை ஜப்பானியப் பிரதமர் திரு. புக்கூடா நேற்று டோக்கியோவில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் வெளியிட்டார்.

எந்தெந்த அமைச்சர் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படுமா அல்லது அமைச்சரவை விஸ்தரிக்கப்படுமா? என்றவிபரங்களை அவர் தெரிவிக்கவில்லை.

ஜப்பானிய அமைச்சரவை பதவியேற்று 11 மாதங்களாகின்றன. (உ)

இந்துசமுத்திரப் பிராந்தியம்:

## இராணுவத் தளங்களை அகற்றுக! இந்தியா மீண்டும் வலியுறுத்து

புதுடில்லி, நவ. 25
இந்துசமுத்திரப்பிராந்தியத்திலிருந்து சகல வல்லரசுகளினது இராணுவத் தளங்களும் அகற்றப்பட வேண்டுமென்று பாரதம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

லோகசபையில் உரையாற்றுகையில் பாரத வெளிநாட்டு அமைச்சர் திரு. வாஜ்பாய் இந்துசமுத்திரப் பிராந்தியத்திலிருந்து சகல வல்லரசுகளினது இராணுவத் தளங்களும் அகற்றப்பட வேண்டுமென்ற பாரதத்தின் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினர். (உ)

## அழகி மணம்பெரி நினைவாக...

(கொழும்பு)
அழகி பிரேமா மனம்பெரி அடக்கம் செய்யப்பட்டுள்ள புதைகுழி அருகே ஜனதா விமுக்தி பெரமுனை அடுத்தமாதம் 3ம் திகதி மாபெரும் கூட்டமொன்றை நடத்த ஒழுங்குகள் செய்துள்ளது.

அழகுராணி பிரேமா மனம்பெரி, 1971ல்இடம்பெற்ற பயங்கரவாதத்தின் போது கொல்லப்பட்டது தெரிந்ததே.

## மருத்துவமனையில் ஜெயப்பிரகாஷ்

புதுடில்லி, நவ. 25
திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் வைத்திய பரிசோதனை பொருட்டு நேற்று பம்பாய் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது நிலை திருப்திகரமாக இருப்பதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. [உ]

## இன்று

[யாழ்ப்பாணம்]
அமரர் திருச்செல்வத்தின் ஓராண்டு சிரார்த்ததினத்தையொட்டி அஞ்சலிக்கூட்டமொன் இன்றுமாலை நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமை வகிப்பார். [ஜெ]

'நிவாரண வேலைகளில் ஈடுபடுக'

## தி. மு. க. தலைமைப்பீடம் தொண்டர்களுக்குப் பணிப்பு

சென்னை, நவ. 25
புயலால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரண வேலைகளில் கழகம் பங்கு பெறும்பொருட்டு கைதுசெய்யப்பட்ட கலைஞரையும், தி. மு. க.வினரையும்விடுதலை செய்யும்படி தி. மு. க. வால் நடத்தப்பட்டுவந்த அறப்போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்முடிவை அறிவித்த தி. மு. கழகத் தலைமைப்பீடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடன் உதவும்படி கழக உறுப்பினர்கள் அனைவரையும்பணித்துள்ளது.

தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம்கூட்டமாகச் சென்று நிவாரணவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெண்கள் பிரிவுக்கு மகளிர் தலைவி அலமேலு அப்பாத்துரை தலைமை தாங்குகிறார். புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சென்னை அண்ணாநகர் தொகுதியில் இம்மகளிர் அணி துரித கெதியில் நிவாரணவேலைகளில் ஈடுபட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. (கி-உ)

## புயல் கொடுமை: ஆலயங்களும் பாதிப்பு

சென்னை, நவ. 25
அண்மையில் தமிழ்நாட்டில் வீசிய கோரப்புயல் ஆலயங்களிலும் தனது கைவரிசையை காண்பிக்கத்தவறவில்லை.

திருப்புத்தூர் தியாகராஜர் கோவிலின் கோபுரக்கலசங்கள் மூன்றையும் புயல் அள்ளிச் சென்றுவிட்டது.

நாகர்கோவிலில் அலைகடல் ஓரம் அழகுக்காட்சி நல்கும் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தையும்புயல்மோதிப்பார்த்துள்ளது. ஆயினும்அன்னையின் ஆலயக்கதவைமட்டுமே அதனால் அசைக்கமுடிந்துள்ளது. இதனால் சித்திரவேலைப்பாடமைந்த பிரமாண்டமான அக்கதவு மட்டும் சிறிது சேதத்துக்குள்ளாகியுள்ளது.

மீனவர் கிராமமான வேளாங்கண்ணியில் புயலுக்கு அஞ்சிய சுமார் 10,000க்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்நேரம் ஆலயத்துள் தஞ்சம் புகுந்திருந்தனர். ஆயினும் அன்னையின் அருளால் எவ்வித சிறுசேதமும் இவர்களுக்கு ஏற்படவில்லை. (கி-உ)

தமிழகத்தில் காங்கிரஸ் தலைவர்:

## 'விவரிக்கமுடியாதவேதனை'

புதுடில்லி, நவ. 25
ஆந்திராவில் ஏற்பட்டுள்ள வெள்ளக்கொடுமை, புயல் சேதம் பற்றி நேரில் பார்வையிடும் பொருட்டு மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் ஆந்திர மாநிலம் சென்றுள்ளார்.

நாளை அவர் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்குள்ளநிலைமையையும் பார்வையிடுவார்.

இதேவேளை தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்த காங்கிரஸ் தலைவர் திரு. பிரமானந்தரெட்டி புயல் வெள்ளக்கொடுமை பற்றி, ''விவரிக்க முடியாத வேதனை'' என்று குறிப்பிட்டார். (உ)

## ஒருவருக்கு ஒருவாக்கு கொள்கை: ரொடீஷியப் பிரதமர் இணக்கம்

லண்டன், நவ. 25
ரொடீஷியாவில் ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற கொள்கையை ரொடீஷிய சிறுபான்மை வெள்ளையர் இனத்தின் பிரதமர் திரு. இயன் ஸ்மித் ஏற்றுக்கொண்டுள்ளார்.

திரு. ஸ்மித் இக்கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளதனால் 65 லட்சம் ஆபிரிக்கர்களுக்கு வாக்குரிமை கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை ரொடீஷிய விவகாரம் தொடர்பான திரு. ஸ்மித்தின் ஆலோசனைகளைத் தேசியவாதத்தலைவர்கள் நிராகரித்துள்ளனர்.

விடுதலை இயக்கங்கள்கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து சமரச முயற்சி வெற்றிபெற வழிவகுக்குமாறு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ

## தேசாய்க்கு கொலை மிரட்டல்

(கோலாலம்பூர்)
இந்தியப்பிரமர் மொரார்ஜி தேசாயை கொலை செய்யப் போவதாக எச்சரிக்கைக்கடிதமொன்று மலேஷியச் தலைநகரான கோலாலம்பூரிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு 'ஆனந்த மார்க்கம்' இயக்கத்தினரால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள 'ஆனந்த மார்க்கம்' இயக்கத்தின் தலைவர் சர்க்காரை சிறையில் இருந்து மொரார்ஜி தேசாய் விடுதலை செய்யத்தவறினால் அவரின் உயிர் பறிக்கப்படுமென இக்கடிதத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது: கொலை, கற்பழிப்பு போன்ற சமூக விரோதக்குற்றங்களில் ஈடுபட்டதாகவும் அரசியல் சதி செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு ''ஆனந்தமார்க்கம்'' இந்தியாவில் தடைசெய்யப்பட்டு அதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ் ஆனந்த மார்க்கத்திற்கு உலகமெங்கும் கிளைகள் இருப்பதாக நம்பப்படுகிறது.

இக்கொலைமிரட்டல் சம்பந்தமாக மலேஷியப் பொலிசார் துரித விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். [கி-உ]

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)
தேசிய லொத்தர் சபையின் 640வது சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு:

முதலாம் பரிசு
(ஒரு லட்சம் ரூபா)
**51 L 0075**

இரண்டாம் பரிசு:
(40,000 ரூபா)
**21 C 0298**

மூன்றாம் பரிசு:
(10,000 ரூபா)
**54 W 0362**

தலா 1,500 ரூபா பரிசுகள் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரங்கள்:

| | |
|---|---|
| 05 A 0134 | 18 A 0833 |
| 57 A 0161 | 14 B 0950 |
| 25 B 0223 | 42 B 0495 |
| 19 C 0333 | 22 C 0951 |
| 38 C 0473 | 47 C 0202 |
| 50 C 0910 | 51 C 0260 |
| 54 C 0391 | 52 D 0871 |
| 13 E 0368 | 02 F 0091 |
| 27 F 0271 | 56 F 0507 |
| 16 H 0154 | 57 H 0223 |
| 14 J 0244 | 25 J 0485 |

| | |
|---|---|
| 45 J 0859 | 20 K 0332 |
| 29 K 0748 | 28 K 0863 |
| 32 K 0366 | 52 K 0390 |
| 60 K 0515 | 18 L 0320 |
| 53 L 0715 | 55 L 0256 |
| 02 M 0727 | 16 M 0384 |
| 56 M 0088 | 12 N 0630 |
| 41 N 0531 | 45 N 0568 |
| 50 N 0197 | 50 N 0655 |
| 02 O 0979 | 08 O 0545 |
| 14 O 0249 | 31 O 0753 |
| 32 O 0382 | 46 O 0355 |
| 06 P 0165 | 08 P 0110 |
| 11 P 0174 | 30 P 0714 |
| 38 P 0848 | 48 P 0642 |
| 49 P 0060 | 50 P 0913 |
| 59 P 0189 | 18 Q 0030 |
| 19 Q 0413 | 28 Q 0314 |
| 55 Q 0825 | 25 R 0291 |
| 29 R 0329 | 35 R 0954 |
| 45 R 0549 | 49 R 0164 |
| 10 S 0926 | 11 S 0376 |
| 16 S 0185 | 21 S 0744 |
| 27 S 0400 | 25 S 0050 |
| 36 S 0771 | 25 T 0055 |
| 33 T 0167 | 40 T 0021 |
| 52 T 0149 | 04 U 0461 |
| 11 U 0776 | 24 U 0621 |
| 08 V 0252 | 14 V 6417 |
| 05 W 0288 | 17 W 0200 |

(4-ப் பக்கம் பார்க்க)

# அரசியல் திட்டத்தை திருத்தமுடியுமே தவிர அதனை மாற்ற உரிமை கிடையாது!

இன்று அமரர் 'திரு'வின் நினைவாஞ்சலிக் கூட்டம் நல்லூரில் நடைபெறவிருக்கிறது. மிகவும் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. சங்கிலி மன்னனின் இராசதானியாகிய நல்லூரை நினைக்கும் பொழுது அமரர் 'திரு' ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ள தமிழர் இறைமை நினைவுக்கு வருகிறது.

## தமிழருக்கு 'திரு' கூறுவது

அன்று கண்ண-பரமாத்மா காண்டீபனை நோக்கி 'நீ ஆத்மா-அழியாப் பொருள்' என்று உண்மையை விளக்கி உபதேசித்தது போல் இன்று அமரர் 'திரு' தமிழ் பேசும் மக்களுக்குக் கூறியிருப்பது என்னவென்ருல் 'நீங்கள் இழந்த இறைமையை மீண்டும் பெற்று விட்டீர்கள். எனவே அதனைப் பாவிக்க முற்படுங்கள்' என்பதாகும்.

இச்சந்தர்ப்பத்தில் இறைமை என்பது அரசுரிமை. இது மன்னன் ஆட்சியில் மன்னனிலும், மக்கள் ஆட்சியில் மக்களிலும் இருக்கும். எனவேதான் சங்கிலி மன்னன் காலத்தில் சங்கிலி மன்னனிடம் தமிழரின் இறைமை தங்கியிருந்தது. அதே போன்று சிங்கள மக்களின் இறைமை சிங்கள மன்னர்களிடம் தங்கிருந்தது.

## போர்த்துக்கேயரை எதிர்த்த ஒரே இலங்கை மன்னன்

1597-ம் ஆண்டு கோட்டை அரசன் தனது இராச்சியத்தைப் போத்துக்கேய மன்னனுக்கு மரணசாதனம் மூலம் கையளித்தான். அந்நாளில் கண்டியும் உவாவும் டோஞ கதறீனுவின் ஆட்சியிலும் யாழ்ப்பாணம் அதன் சொந்த மன்னனின் ஆட்சியிலும் இருந்தது. இப்படியாக இலங்கை பற்றி றுபெயிரோ எழுதிய புத்தகத்தின் 11-ம் அத்தியாயத்தில் 90, 91-ம் பக்கங்களில் எடுத்துரைக்கப் பட்டிருக்கிறது. போத்துக்கேயர் காலத்தில் தமிழ் இராச்சியம் ஒன்று இருக்கவில்லை என்று இன்றும் கூறும் சிலர் இதனைக் கவனித்தல் நலம். இதனைத் 'திரு' ட்ரயல் அட்பார் வழக்கில் எடுத்துக்காட்டும் பொழுது போத்துக்கேயரைப் போரில் எதிர்த்த ஒரேஒரு இலங்கை மன்னன் சங்கிலி என்று சரித்திர ரீதியாகக் கூறினர். அப்படி வீரம் படைத்தவர்களாக ஒருகாலத்தில் இருந்தோம் என்பதை நினைவுபடுத்த வேண்டியிருக்கும் நிலையிலிருக்கிறோம். கோட்டை மன்னனிடமிருந்து மரண சாதனம் மூலம் அவர்களது இறைமையும் சங்கிலி மன்னன் வீரமரணம் எய்தியதன் மூலம் தமிழரின் இறைமையும் போத்துக்கேயர் வசம் சென்றன. இதன் பின் இவை ஒல்லாந்தர் மூலம் ஆங்கிலேயரைச் சென்றடைந்தது அதே போன்று கண்டி இராச்சியம் வீழ்ந்த போது அப்பிரதேச மக்களின் இறைமை ஆங்கிலேயர் வசம் சென்றடைந்தது.


இலங்கைக்குச் சுதந்திரம் கொடுத்தபோது பிரிட்டிஷ் பாராளுமன்றம் இலங்கை மக்களுக்கு ஓர் அரசியல் திட்டத்தைத் தயாரிக்கும் உரிமையை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் கொடுத்ததுபோன்று கொடுக்கவில்லை. அரசியல் திட்டத்தைத் திருத்தும் உரிமை வழங்கப்பட்டதே ஒழிய அதனை மாற்றும் உரிமை கொடுக்கப்படவில்லை.

எனவே பிரிட்டிஷ் பாராளுமன்றத்துடன் சட்டத்தொடர்பைத் துண்டித்து அரசியல் திட்டமொன்றை ஆக்கும் உரிமையை 1972-ம் ஆண்டில் பெற முயன்றது அரசாங்கம். இந்தத் துண்டிப்பினல் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் இருந்த தமிழரின் இறைமை பிறம்பாகவும் சிங்களவரின் இறைமை பிறம்பாகவும் அவரவருக்குச் சென்றடைந்துள்ளது.

அதன்பின்பு அவரது சம்மதமில்லாமல் ஆக்கும் அரசியல் திட்டம் செல்லுபடியாகாது என்ற 'திரு'வின் வாதம் அரசியல் திட்டத்தின் ஆக்கியோனை டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வாவுக்கும் பெரும் பயத்தைக் கொடுத்தது. அதனுற்ருன் நீதிமன்றம் அரசியல் சட்டம்பற்றி ஆராயமுடியாது என்று பராளுமன்றத்திலிருந்து 'திரு'வின் வாதத்தை முறியடிக்க எத்தனித்தார்.

## சொல்லிச் சென்ருர்

சுருங்கச் சொல்லின் 'நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம். இது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்' என்று தமிழ் மக்களுக்குச் சொல்லிவைத்துவிட்டு மறைந்துவிட்டார் 'திரு'.



ஆர். பாலசுப்பிரமணியம்
-- சட்டத்தரணி

## உரிமைபெற நீதிமன்றத்தை மட்டும் நம்பியிருக்கவில்லை

இன்றைய அரசியல் சட்டம் தமிழ் மக்களைக் கட்டுப்படுத்தாது என்று எடுத்துக் காட்டிய பிரபு நீதிபதி இவ்விடயத்தில் தாம் தலையிடத் தமக்கு அதிகாரம் இல்லை என்று கூறியது எல்லோருக்கும் தெரியும்.

ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் மீளாய்வு மனு மீதாத விவாதம் நடந்த பொழுது பிரதம நீதியரசர் திருவைப்பார்த்து அரசியல் சட்டம் பற்றி இங்கு வாதாடவில்லையா? என்று கேட்டார். அதற்குத் திரு பின்வருமாறு கூறினர். சைபிரஸ் நாட்டில் அரசியல் சட்டம் ஸ்திரமான அரசாங்கத்தைக் கொண்டுள்ள படியினுல் சரியானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்த போதிலும் அதுமக்களால் தூக்கி எறியப்பட்டது. எனவே நாமும் இவ்விடயத்தைப் பற்றி இங்கு நேரத்தைச் செலவழிக்க விரும்பவில்லை என்று விகடமாக ஓர் ஆழ்ந்த கருத்தை மிகத் தைரியமாக எடுத்துரைத்தார்.

இப்படியாக அமரர் 'திரு' தமிழ்மக்களின் விடுதலையைச் சிரமேற்கொண்டு ஒரு கர்ம வீரனுகக் கடமையாற்றினுர்.

தனக்கென ஒருசொந்த நிலமில்லாத பலஸ்தின விடுதலை இயக்கத்திற்கு சர்வதேச அரங்கில் ஓர் இடமுண்டென்ருல்; பலஸ்தின விடுதலை இயக்கத்தை கூட்டுசேரா மாநாட்டில் ஓர் உறுப்பினராக, ஏற்று ஸ்ரீலங்கா குடியரசு அதில் அங்கம் வகிக்கும் போது, தனக்கென ஒரு பிரதேசத்தைக் கொண்டுள்ளதும், தனது அரசுரிமையை மீண்டும் பெற்றுள்ளதுமான ஈழத்தமிழ் மக்களுக்கு தன் அதேநிலை வழங்கக் கூடாது என்று அமரர் திருச்செல்வம் இறைமை பற்றி நீதிமன்றத்தில் சமர்ப்பணம் செய்தபோது எல்லோரும் வியந்தனர். இந்நிலையை ஏற்படுத்த தமிழ் மக்கள் அயராது உழைக்க வேண்டும்.

இதற்காகவே அமரர் திருச்செல்வம் (P L,O) பலஸ்தீன விடுதலை இயக்கம் போன்று (T.L.O) தமிழர் விடுதலை இயக்கம் இருக்கவேண்டுமென விரும்பினுர்.

வழமை போன்று அமரர் 'திரு'வின் பெருமையை அவர் இருக்கும் பொழுது பல மக்கள் உணரவில்லை, ஆகஸ்ட்மாதக் கலவரத்தின் போது எத்தனையோ பேர் இன்று 'திரு' இருந்திருந்தால்? என்று ஏங்கித் தவித்தனர். இந்நிலையில் தமிழ் பேசும் மக்கள் பிரிவுபடாமல் ஒற்றுமையாக நிதானமாக, சாதுர்யமாக, அமரர் 'திரு' காட்டிய பாதையைப் பின்பற்றி பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம் என்று விடுதலைப் பாதையை நாடுவதே நாம் அவருக்குச் செய்யக்கூடிய ஒரே அஞ்சலி.

(முற்றும்)

## நீதிமன்றத்தில் 'திரு' எடுத்துரைத்த ஆணித்தரமான கருத்துக்கள்

---

யாழ். லயன்ஸ் கழக
நத்தார் சித்திரப் போட்டி:

# அமெரிக்கத் தூதரகம் பரிசு வழங்குகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகம் நடாத்தும்பாடசாலை மாணவர்களுக்கான நத்தார் புதுவருட சித்திரப் போட்டிக்கான பரிசில்களை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதராலயம் வழங்க முன்வந்துள்ளது.

போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் சித்திரங்கள் அனைத்தும் அடுத்த மாதம் 17-ம் திகதி கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்படும்.

போட்டிகளில் பங்குபற்றுவதற்கு பல பாடசாலைகளும் தம்து ஆதரவைத் தெரிவித்த தற்கமைய போட்டிக்கான இறுதித்தினம் டிசம்பர் மாதம் 15-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான சித்திரங்களை ஒருரூபா போஸ்டல் ஓடருடன் காரியதரிசி, யாழ். லயன்ஸ் கழகம், சிலோன் மேர்ச்சன்ஸ் ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

போட்டியின் மூலம் கிடைக்கும்நிதியை லயன்ஸ் கழகம் சமூக சேவைக்கு பயன்படுத்தவுள்ளது. (செ)

## வாலிபர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

இ. போ. ச. பஸ்ஸில் ஏற முயன்றபோது தவறி கீழே விழுந்ததாகக் கூறப்படும் வாலிபர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

இச்சம்பவம் மருதனுமடம் சந்தியில் நிகழ்ந்தது.

காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த காலை 'எக்ஸ்பிரஸ்' பஸ்ஸிலேயே இச்சம்பவம் சம்பவித்தது.

காயமடைந்தவர் உடன் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார் [கெ

## சுவீப்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 29 W 0025 | 33 W 0549 |
| 04 X 0239 | 26 X 0913 |
| 27 X 0280 | 31 X 0019 |
| 37 X 0818 | 05 Y 0342 |
| 21 Y 0244 | 28 Y 0912 |
| 42 Y 0623 | 42 Y 0671 |
| 59 Y 0578 | 14 Z 0362 |
| 37 Z 0590 | 41 Z 0731 |
| 42 Z 0261 | 53 Z 0972 |

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை] (உ)

## கல்வி மந்திரியிடம் வேண்டுகோள்

(மாவிட்டபுரம்)

வசதிகள், சேவைகள் கட்டணத்தில் பாடசாலைகளில் நியமனம் பெற்ற ஆசிரியர்களது நியமனங்களை நிரந்தரமாக்குமாறும் அல்லது தராதரப்பத்திரமற்ற ஆசிரியர் நியமனத்தில் இவர்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறும் கல்வியமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

வசதிகள், சேவைகள் கட்டணத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்களை எதிர்நோக்கும் பிரச்னைகளை வென்றெடுக்குமுகமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ள வசதிகள், சேவைகள் கட்டணத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் சங்கமே இவ்வாறு கல்வியமைச்சரிடம் கோரியுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் திரு. ஐ. திருச்செல்வம் தலைமையில் நடந்த இச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வசதிகள், சேவைகள் கட்டணத்தில் நியமனம்பெற்ற ஆசிரியர்களையும் பெற்ருர் ஆசிரியர் சங்க நிதியிலும், இலவசமாகவும் நியமனம்பெற்ற ஆசிரியர்களையும் நிரந்தரமாக அவ்வப்பாடசாலைகளில் நியமிக்குமாறும் அல்லது தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் நியமனத்தில் இவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படவேண்டுமெனவும் கல்வியமைச்சரிடம் கோருவதென தீர்மானிக்கப்பட்டது.

தம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கல்வியமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்புவதெனவும் முடிவாகியது.

(உ)

## "இலக்கிய உலகின் அன்புக்குரியவர்"

[கொழும்பு]

"இலக்கிய உலகம் முழுமையினதும் அன்புக்கும் அளப்பரிய மதிப்புக்கும் இலக்கானவர் அமரர் இரசிகமணிகனக செந்திநாதன்" என்று இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அமரர் செந்திநாதனின் மனைவியாருக்கு அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

[உ]

RIO (Jaffna) Daily 10-30 4-45 7-15&9-45 P. M.

Special school shows at 1-30 P. M.
by prior arrangement.

A story beloved by children of all ages for over half a century. Now a masterpiece in film industry

THE RAILWAY CHILDREN

(Wonderful Family Entertainment)

Regal (Jaffna)
Daily at 4-45 7 & 9-30 P. M. only
LEX BARKER in

Fury Of The Sabers

[Color Scope]


# அரசு அங்கீகாரமின்றி

## சிறு கைத்தொழிலை ஆரம்பிக்கலாம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் முன் அங்கீகாரம் பெறாமல் சிறுகைத்தொழில்களை எவரும் ஆரம்பிக்கலாம்!

வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில், கைத்தொழில் சம்பந்தமான இறக்குமதியை பன்முறைப்படுத்தும் நிதி அமைச்சரின் பட்ஜட் யோசனைகளைத் தொடர்ந்து இப்புதிய வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளது.

சிறுகைத்தொழில்களை ஆரம்பிப்பதானால் முன்னர் அரசின் அங்கீகாரம் பெறவேண்டும் ஆனால் இப்போது சிறுகைத்தொழில் எதையும் ஆரம்பிக்க பிரும்பும் ஒருவர், அரசாங்கத்தின் முன் அங்கீகாரம்பெறாமல், ஏழு லட்சம் ரூபா பெறுமதியான இயந்திரங்களையும் மற்றும் உபகரணங்களையும் இறக்குமதிசெய்யலாம். இதற்காக கைத்தொழில் அமைச்சிடமிருந்தோ அல்லது இறக்குமதி, செலாவணி கட்டுப்பாட்டு இலாகாவிடமிருந்தோ அல்லது வேறு இலாகாக்களிடமிருந்தோ அனுமதிபெறத் தேவையில்லை.

புதிய திட்டத்தின்கீழ். இறக்குமதியாளர் தமது தேவைக்காக வங்கி ஒன்றுடன் கடன் சம்பந்தமான கடித ஒப்பந்தத்தை (எல். சி.) செய்து கொண்டால்போதும்.

கைத்தொழிலதிபர்களின் ஏகபோகத்தை முறியடிக்கவும், இறக்குமதிப் போட்டியினால் தரமான பொருள்களை இங்கு உற்பத்தி செய்யவுமே புதிய திட்டம் அமுல் செய்யப்படுகிறது.

## 10 வருடச் சேவையின் பின்னர் ஓய்வுபெறலாம்

(கொழும்பு)

பத்துவருடச்சேவையை முடித்துக்கொண்ட அரசாங்க ஊழியர்கள், எவ்வித காரணமும் காட்டாமல் ஓய்வுபெறலாம்.

இந்தத் தகவலை, பொது நிர்வாக, வீடமைப்பு பிரதி அமைச்சர் திரு. பேர்ஸி சமரவீரா வெளியிட்டார்.

அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவைச் சங்கத்தின் வருடாந்தக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயேமேற்கண்டவிபரத்தை பிரதி அமைச்சர் வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

''இதுவரை அரசாங்க ஊழியர்கள்; மொழிப்பிரச்னை அல்லது வைத்திய காரணங்களாலேயே ஓய்வுபெற முடியும் என்ற 'கட்டாயம்' இருந்து வந்தது. ஆனல் இனிமேல் இக்காரணங்கள் எதுவும் காட்டத்தேவையில்லை. அரசாங்க சேவையில் பத்து ஆண்டுகள் பூர்த்திசெய்துவிட்டால், நீங்கள் தாராளமாக ஓய்வுபெறலாம்'' என்று பிரதி அமைச்சர் திரு. பேர்ஸி சமரவீரா இக்கூட்டத்தில் தெரிவித்தார்.

## ஆலோசனை

புதுடில்லி, டிச. 25

தேர்தல் முறைகளை மாற்றியமைப்பது குறித்து மத்திய அரசு ஆலோசனை செய்துவருகிறது. (உ)

கொழும்பிலிருந்து

## திருமலை, மட்டுநகருக்கு தனித்தனி ரயில் சேவைகள்

### திருமலையில் அமைச்சர் மொஹமத் அறிவிப்பு

(திருகோணமலை)

நேற்று திருகோணமலைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வந்த போக்குவரத்து அமைச்சர் ஜனப் எம். எச். முகமத் திருகோணமலை ரயில் நிலையத்தை பார்வையிட்டார். கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கும், திருகோணமலைக்கும் தனித்தனி ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்ற தகவலை அவ்வேளை அமைச்சர் வெளியிட்டார்.

திருகோணமலையில் ரயில் சேவையை சீராக்கும்வகையில் ரயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

திருகோணமலைக்கு கொழும்பில் இருந்து தனி ரயில் சேவை ஈடுபடுத்தப்படவிருப்பதாக அமைச்சர் தெரிவித்ததற்கு, பாராட்டுத் தெரிவித்த திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் திருகோணமலைக்கு அமைச்சர் நேரில் விஜயம்செய்து நிலைமைகளைப் பார்வையிட்டதற்குத் தமது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

அமைச்சர் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் சேருவில எம். பி. திரு. லீலாரத்னவும் கலந்து கொண்டார். (உ)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை யங்ஸ்டேயல் விளையாட்டுக் கழகத்தின் 8-வது ஆண்டு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று ஆரம்பமானது.

காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் ஆரம்பமான இச்சுற்றுப்போட்டி தொடர்ந்து நடைபெற்று சாம்பியன் போட்டிகளுடன் முடிவடையும். (உ)

## 'தென்றல்'

[யாழ்ப்பாணம்]

'தென்றல்' பல்சுவை மாசிகையின் முதலாவது இதழ் வெளியீட்டுவிழா அடுத்த வாரம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இச்சஞ்சிகை யாழ். மத்திய கல்லூரிப் பழைய மாணவர்களினால் நடத்தப்படுகிறது. [அ]

## 7 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வட்டு.எம்.பி.யின் சம்பளம்

[சுழிபுரம்]

வட்டு எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு தமது எம். பி. பதவிக்கான சம்பளத்தை வட்டுக்கோட்டைத் தொகுதியிலடங்கிய ஏழுஉள்ளூராட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்து அளிக்க முன்வந்துள்ளார்.

தமது எம்.பி சம்பளத்தை வட்டு தொகுதியிலுள்ள ஏழு ஜனசமூக நிலையங்களுக்குப் பகிர்ந்தளிக்கவுள்ளார் என்று செய்தி வெளியாகியிருந்தது தவறு. [அ]

## அமைச்சர் நடவடிக்கை

[கொழும்பு]

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பொதுமக்களுக்குச் சீராகக்கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தமது அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளார். தமது அதிகாரிகளுடன் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்திய அமைச்சர் மிளகாய், வெங்காயம், புடவைவகைகள் என்பன இறக்குமதி செய்யப்படும் என்று அறிவித்தார்.


ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்

பெண் தெய்வம்

6-வது வெற்றி வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த

தசாவதாரம்

(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்]

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்

உனக்காக நான்

(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்

துணிவே துணை

லிடோ (யாழ்.நகர்)
எம். ஜி. ஆர். — லதா நடித்த
போன்: 7693

நீதிக்கு தலைவணங்கு

சாந்தி (யாழ். நகர்)
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி.... பானுமதி....
பாலையா.... தங்கவேலு....
நடித்த

அம்பிகாபதி

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த

தாயைக் காத்த தனயன்

(புதிய பிரதி)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்

மூன்று முடிச்சு

திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.

பூலோகசிங்கம்ஸ் சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-லதா

உழைக்கும் கரங்கள்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி- வைஜெந்திமாலா

பார்த்திபன் கனவு

4-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.

உலகம்சுற்றும் வாலிபன்

(கலர்)

**மணிவாக்கு**

எல்லாருக்கும் திருப்தி கொடுப்பதற்கென நடந்து கொள்வன் ஒருவருக்கும் திருப்தி கொடான்.

— காந்திமான்

ஈழநாடு
The Eelanaadu

## நல்லசந்தர்ப்பம்!

அரசாங்கத்தின் முன் அனுமதி பெறாமலே எவரும் சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

ஏழு லட்சம் ரூபாய் வரை பெறுமதியான இயந்திர சாதனங்களை இதற்காக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கும் சந்தர்ப்பமளிக்கப் பட்டிருக்கிறது.

சிறுகைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கும் இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்வதற்கும் வங்கிக்கடன் வசதி பெறுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நல்ல வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டியது வசதியுள்ளவர்களை மட்டுமே சார்ந்திருக்கவேண்டியது அவசியமில்லை. வசதிகுறைந்தவர்களும்கூட சிறு சிறு தொகையைப் பங்காகச் செலுத்திக் கூட்டுறவு மூலமாகவும் புதிய சிறு கைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு இது நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

இந்த நாட்டில் வாழும் தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் கடந்தசிலவருடங்களாகத் தமிழ்பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லையென்பதும், புதிய கைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கோ, கனரகத்தொழிற் சாலைகளை நிறுவுவதற்கோ அரசாங்கம் ஊக்கமோ உதவியோ அளிக்கவில்லையென்பது பெரியகுறையாக இருந்து வந்திருக்கிறது.

''கற்பகதரு'' என்றழைக்கப்படும் பனையிலிருந்து பல பொருள்களை உற்பத்திசெய்யலாமென்றும் இதன்மூலம் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து அந்நியச்செலாவணியையும் சம்பாதிக்கலாமென்றும் இதற்காகப் பனம் பொருள் ஆராய்ச்சிநிலையமொன்றை நிறுவவேண்டுமென்றும் பலரும் பல தடவைகளிலும் வற்புறுத்திவந்ததுடன், ஆட்சி மன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனாலும் இதுவரை இது செயல்படவில்லை.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் மூளைபலத்திலும் உடல் பலத்திலும் யாருக்கும்சளைத்தவர்கள் அல்லர் என்பதை இந்த நாடு மட்டுமல்ல உலகமே நன்கறியும்.

வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வதைவிடநமது நாட்டிலேயே கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

இந்த வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பெரும் பொறுப்பும் கடமையும் இருக்கின்றது.

சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குக் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பைச்சரியாகப் பயன்படுத்தி, வேலையற்றிருக்கும் தமிழ்வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதுமல்லாமல், பிறருக்கு அடிமை செய்து வாழவேண்டிய நிலையை இல்லாதொழித்து சுதந்திரமாக வாழ்வும் வழி செய்யலாம்.

# வெளிநாட்டுக் கப்பல்கள் அத்துமீறி நுழைந்தால் பறிமுதலாகும்

## 'அமிரின்' கேள்விக்கு அமைச்சர் பதில்

(கொழும்பு)

இலங்கைக் கடற் பிராந்தியத்தில் வேற்று நாட்டுக் கப்பல்கள் அத்துமீறி நுழைவதைத் தடுக்கும் புதிய சட்ட மூலம் விரைவில் நிறைவேற்றப்படும்.

இத்தகவலை கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா நேற்று தேசிய அரசு பேரவையில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் வெளியிட்டார். இதுபற்றி கடற்றொழில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் 'எமது கடற் பிராந்தியத்தில் வேற்றுநாட்டுப் கப்பல் குறிப்பாக தாய்வான் கப்பல்கள் மீன்பிடிக்கும் நோக்குடன் அத்துமீறிப் பிரவேசிப்பதைத் தடுத்து அக்கப்பல்களைப் பறிமுதல் செய்யும் வகையில் இப்புதிய சட்டமூலம் அமையும்.

இலங்கையின் கடற் பகுதிகளில் கடற்படையினரின் ரோந்துச் சேவையை விஸ்தரிக்கும் பொருட்டு புதிய படகுகள் கொள்வனவு செய்யப்படவிருக்கின்றன". (உ)

### விவசாயிகள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கடன்பெறும் விண்ணப்பப் பத்திரங்கள் பூநகரி இலங்கை வங்கியில் இல்லாததினால், பூநகரிப்பகுதி விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர்.

வங்கியில் இப்பத்திரங்கள் இல்லாததினால் தினமும் விவசாயிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்கின்றனர். (க-அ)

### இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வண்ணைசாந்தையர் மடம் கற்பக விநாயகர் கோவில் விநாயகர் விரதலட்சார்ச்சனை இன்று ஆரம்பமாகிறது. அடுத்தமாதம் 15ம் திகதி லட்சார்ச்சனை பூர்த்தியுறும். அன்றையதினம் பிற்பகல்பஞ்சமுக விநாயகர் வெளிவீதி வலம் வருவார். [அ]

### எதிர்க்கட்சி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இன்று தமிழ்தேசியஇனம் மட்டும் அரசியல் திருப்புமுனையில் நிற்கவில்லை. தென்னிலங்கையில் உள்ளவர்களும் இந்த நாட்டில் வலதுசாரி ஆட்சியொன்றை அமைக்க வழிசமைத்துவருகின்றார்கள். இதனால் நாட்டில் வெகுவிரைவில் மாற்றம் ஒன்று ஏற்பட உள்ளது.

அரசு, உலகவங்கியினதும் சர்வதேச நாணயநிதி சபையினது வேண்டுகோளை ஏற்று வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. இது நாட்டு மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தவுள்ளது.

இந்த நாட்டின் தமிழ் இனத்தை ஒருதேசிய இனமாக தென்னிலங்கையர் அங்கீகரித்தால் மட்டுமே, இந்த நாட்டின் பொருளாதார விடுதலைக்கு நாம் கைகொடுக்க முடியும். அன்றேல் நாம் நமக்கென்று வகுத்த விடுதலைப் போரில் ஈடுபட்டு எமது சொந்த மண்ணில் சுயமாக சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு வழிசமைப்போம். [கெ-இ]

### பண்ணை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு காணி வழங்கவுள்ளது.

**காணி கிடைக்கும்வரை**

அரசு மூலம் காணி பெற்ற அகதிகள் காணி கிடைக்கும் வரை கைதடி முகாமில் வைத்திருக்கப்படுவார்கள் எனக் கூறப்படுகிறது.

கொழும்பு செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஒவ்வொரு அகதிகள் குடும்பத்திற்கும், 200 ரூபா பெறுமதியான உடைகளை வழங்கியுள்ளனர்.

**சேமமடுவில் காணி**

இலங்கைப்பிரஜைகளல்லாத 5 குடும்பங்களுக்கு ஓமந்தையிலுள்ள சேமமடு என்ற இடத்தில் காணி வழங்க அகதிகள் புனர்வாழ்வுச்சபை ஏற்பாடுசெய்துள்ளது.

பண்ணை முகாமில் இருந்த திருமதி சந்தானம், குழந்தையொன்றை பிரசவித்துள்ளார். இவர் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில், பிரவசம் முடிந்தபின் மீண்டும் முகாமை வந்தடைந்துள்ளார்.

**எவரும் இந்தியா செல்லவில்லை**

முகாமிலுள்ள எவரும் இந்தியா செல்லவில்லை. இந்தியா போக விரும்பிருந்தவர்கள் தற்பொழுது வவனியாவில் காணி பெற்று, குடியேறியுள்ளனர்.

பண்ணை முகாமை அரசு மூடிவிட்டபோதிலும், அங்குள்ள 11 குடும்பங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. [க-இ]

### 'பட்ஜட்' தமிழர் ஆசிரியர் இன்று ஆராய்வர்

[யாழ்ப்பாணம்]

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது வரவு செலவுத்திட்டம் பற்றி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க ஆட்சி மன்றம் இன்று யாழ். நகரில் கூடி ஆராய்கிறது.

யாழ் நாவலர்மகாவித்தியாலயத்தில் திரு. டி. எஸ். கே. வணசிங்க தலைமையில் இன்று 2-வது நாளாக கூடுகிறது. (இ)

### இணைப்பு அதிகாரி

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் - முக்கியமாக உணவுப் பொருட்களின் இறக்குமதி விநியோகம் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்காக இணைப்பு அதிகாரி ஒருவரை பிரதமர் நியமித்துள்ளார்.

மந்திரிசபையின் தீர்மானத்தின் படி 70 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யதிட்டமிட்டிருந்த போதிலும் இப் பொருட்கள் இன்னும் வந்துசேரவில்லை என்றும் இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவையின் செயலாளர் திரு ஜி. வி. பி. சமரசிங்கா இது தொடர்பான வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

திரு. சேபாலஆட்டிகலே பிரதி இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். [இ]

### ஆகஸ்ட்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ட் கலவரம் பற்றி இக்குழு ஆராய்ந்தது.

ஆகஸ்ட் மாதம் கலவரம் நடைபெற்ற சமயத்தில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய சகல பொலிஸ் உத்தியோகத்தர்களுடனும் இக்குழு ஆகஸ்ட் கலவரம் பற்றி விரிவாக ஆராய்ந்து வருகிறது.

வடபகுதியில் உள்ள மற்றும் பல பொலிஸ் நிலையங்களுக்கும் செல்லும் இக்குழு அங்குள்ள உயர் அதிகாரிகளைச் சந்தித்து ஆலோசனை நடத்த இருக்கிறது.

ஆகஸ்ட் கலவரம் போன்று இனிமேலும் நடைபெறுமல் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைகளை பற்றியும் இக்குழு ஆராயும் எனத் தெரிகிறது. [க-இ]

தீவுப்பகுதியில்

### கடன்பெற்று மீண்டும் பயிர் செய்ய வசதி

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் ஏற்பட்ட பெருமழையினால் விவசாயம் பாதிக்கப்பட்ட சகல விவசாயிகளும், தமத்தொழில் சேவைநிலையத்தின் மூலம் கடன்பெற்றுபயிர்ச் செய்கையை மீண்டும் ஆரம்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

முன்னர் கடன்பெற்றுச் செலுத்தாதவர்களும் இவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களாலும் கடன்வழங்குவதற்கு தனி இடாப்பு ஒன்றை தயாரிக்கப்படுவதற்கு தீவுப் பகுதி விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இக்கடன் திட்டம் சோயா அவரை, உழுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, இறுங்கு, சோளம், வெங்காயம், மிளகாய், நெல் ஆகிய பயிர்ச் செய்கையாளருக்கு வழங்கப்படும்.

விவசாய காப்புறுதி செய்தவர்கள் தமக்கு ஏற்பட்ட பயிரழிவுபற்றி காப்புறுதி கூட்டுஸ்தாபனம் மதிப்பீடு செய்த பின்னரே கடன்பெற்று பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியுமென்று விவசாய உத்தியோகஸ்தர் தெரிவித்தார்.

தீவுப்பகுதி விவசாய உத்தியோகஸ்தர்கள் காரியாலயத்தில், தென்னங்கன்றுகள், மா, எலுமிச்சை, தோடை, மாதுளங் கன்றுகள் என்பன விநியோகிக்கப்படவுள்ளன. (கெ-உ)

## நாடும் நடப்பும்

கிளிநொச்சி வவனியாப் பகுதியில் விளைகும் வைக்கோல்களைச் சேகரித்து 'காட்போட்' உற்பத்தி செய்யலாமென்றும் இதற்கான தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கலாமென்றும் இது போன்று வேறுசில தொழிற்சாலைகளையும் நிறுவலாமென்றும் சிலர் கூறிய யோசனைகளைத் தொடர்ந்து யாழ்ப்பாண எம். பி. திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் நேற்று சில நிபுணர்களுடன் ஆலோசனைநடத்தியதாக அறிகிறேன்.

இந்த நல்ல யோசனைகளைச் சரியாகச்செயல்படுத்துவதற்கு நமது நாட்டில் ஆற்றலும் அனுபவமுமுள்ளவர்கள் இருக்கின்றார்கள்.

யோசனைகள்சொல்வதற்குப் பலர் இருக்கலாம்; அவற்றைச் செயல்படுத்தக் கூடியவர்கள் சிலர்தான் இருப்பார்கள். அவர்களைத் தேடிப்பிடிப்பதே ஒருதிறமை. அவர்களைப் பிடித்து அந்தந்தப் பணிகளை அவர்களிடம் ஒப்படைத்தால் நாம் முன்னேறமுடியும்.

0 0 0

தென்னிந்திய மாநிலங்களில் வெள்ளத்தினலும் புயலாலும் ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதத்தையும் உடைமைச் சேதத்தையும் கேள்விப்படும் போது இப்படியும் ஒரு பயங்கரமான அழிவா என்று மனம் கலங்குகிறது. இப்போது திடீர் திடீரென யாழ்ப்பாணப்பகுதியில் மழைபெய்வதும் குளிர்காற்று வீசுவதும் இங்கும் அந்தச் சாயல் ஏற்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

இப்படி நான் யோசித்துக் கொண்டிருக்கையில் கொக்குவில் வாக்கிய பஞ்சாங்ககணிதர் திரு இரகுநாதையரின் சகோதரர் திரு. ஆர். எஸ். சோமசுந்தரஐயர் எழுதியதாக ஒரு கடிதம் என் கைக்குக் கிடைத்தது. அதை வாசக நேயர்களுக்கு இங்கு தருகிறேன்.

இந்தியாவிலும் இலங்கையில் பலபாகங்களிலும் இன்று (24-11-77) முதல் பெருமழையும்வெள்ள அபாயமும் உண்டு. போக்குவரத்து தடைகளும் நிகழும். அடுத்தவாரம் மழையும் காற்றும் புயலும் ஏற்படக்கூடும். ஆகவே விவசாயிகளும் பொதுமக்களும் கவனமாக இருக்கவும், வடபகுதியில் கடல் கொந்தளிப்பும் வரக்கூடும்.

எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது நல்லதல்லவா?

- ஊர்சுற்றி

......

### 'தமிழர் இறைமை' 2-ம் பதிப்பு இன்று வெளியீடு

[யாழ்ப்பாணம்]

அமரர் எம். திருச்செல்வம் ''ட்ரயல் அட் பார்'' நீதிமன்றத்தில் நிகழ்த்தியஉரையின் தொகுப்பு நூலான ''தமிழர் இறைமை''யின் இரண்டாவது பதிப்பு இன்று மாலை யாழ். கலியாண மண்டபத்தில் நடைபெறும் அமரரின் அஞ்சலிக்கூட்டத்தில் வெளியிட்டு வைக்கப்படும்.

இந் நூலை, ஸ்ரீகாந்தா அச்சகத்தார் வெளியிட்டுவைப்பார்கள். [கெ-இ]

### இந்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து ஏதோ ஒரு பொருளை உள்ளே வீசியதாகவும் இதை அடுத்து தீ பரவியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஓடிய இருவரையும் கண்ணுற்ற குறிப்பிட்ட அறையில் இருந்த 'ஸ்டெனே' ஒருவர், அவர்களை விரட்டிக் கொண்டு ஓடியதாகவும் அவர்கள் தப்பி விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் வீதி 88-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna. Telegram Eelanadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.